**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**முன்னிலை:– திருமதி.R.தமிழரசி, B.A.,B.L.,**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை,**
**2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 27 ஆம் நாள் வெள்ளிக்கிழமை**
**அசல் வழக்கு எண்.93/2021**
**CNR NO.TNKR090001112021**

1. சண்முகசுந்தரி
2. மைனர் ஆகாஷ், வயது 8
3. மைனர் ஹரிஹரன், வயது 1–1/2

2,3 மைனர்களுக்காக அவரது தாயார்
சண்முகசுந்தரி ... வாதிகள்

**/எதிர்/**

1. செல்வமணி
2. சுப்பா கவுண்டர்
3. பிச்சைமுத்து
4. முருகேசன்
5. சரவணன்
6. சார்பதிவாளர், தரகம்பட்டி
7. சார்பதிவாளர், கிருஷ்ணராயபுரம்
8. மாவட்ட ஆட்சியர், கரூர் ... பிரதிவாதிகள்

இவ்வழக்கு என் முன்பாக 24.03.2026 ஆம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்தபோது வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.M.செந்தில் அவர்கள் முன்னிலையாகியும், 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.செல்வக்குமார் அவர்கள் முன்னிலையாகியும் பின்னிட்டு நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரின்மையால் தோன்றாத்தரப்பினர்களாக்கப்பட்டும், 3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.பாலகுமார் அவர்கள் முன்னிலையாகியும் பின்னிட்டு நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரின்மையால் தோன்றாத்தரப்பினர்களாக்கப்பட்டும், 6 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் அரசு தரப்பு வழக்கறிஞர் அவர்கள் முன்னிலையாகியும், எடுத்துரைத்த இருதரப்பு வாதங்களை கேட்டும்,

வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**<u>தீர்ப்புரை</u>**

தாவா சொத்துக்களை பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ எந்தவித உரிமை மாற்ற ஆவணமும் செய்யாக்ககூடாதெனவும், வேறு வகையில் தாவா சொத்துக்களை வில்லங்கப்படுத்தாமல் இருக்கவும், வாதிகளுக்கு பாகம் கிடைக்கும் வரை 1, 2 பிரதிவாதிகள் தாவா சொத்தினை எந்தவித உரிமை மாற்றம் செய்யக்கூடாதென நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மற்றும் இதர பரிகாரம் கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>வாதிகள் தரப்பு வழக்குரையின் சுருக்கம்</u>**

1) 1ம் வாதியும், 1ம் பிரதிவாதியும் கணவன்–மனைவி என்றும், 2,3 வாதிகள் அவர்களது குழந்தைகள். 2 முதல் 5 பிரதிவாதிகள் 1ம் பிரதிவாதியின் குடும்பத்தார்கள். திருமணத்திற்கு பின்னிட்டு 1ம் வாதியின் மாமியார் அவரை முறையாக நடத்தவில்லை என்றும், இதனால் 1ம் வாதியும், 1ம் பிரதிவாதியும் தனியாக தனிக்குடித்தனம் செய்து வந்ததாகவும், 1ம் பிரதிவாதிக்கு தனிப்பட்ட வருமானம் எதுவும் இல்லை என்றும், பொது குடும்ப வருமானத்தில் இருந்து தனது செலவுகளை செய்து வந்ததாகவும், 1ம் பிரதிவாதி அனைத்து கெட்ட பழக்கங்களுக்கும் அடிமையாகி தனது சேமிப்பை கரைத்து விட்டதாகவும், பின்னிட்டு 1ம் பிரதிவாதி தனது பெற்றோர் உடனே வசிக்க ஆரம்பித்து விட்டதாகவும், 1 முதல் 5 பிரதிவாதிகள் அனைவரும் சேர்ந்து வாதிகளுக்கு தேவையான அடிப்படை வசதிகளை கூட செய்து கொடுக்காமல் அவர்களை புறக்கணித்ததாகவும், கடந்த 08.06.2021 அன்று வாதிகளை வீட்டில் இருந்து துரத்தி விட்டு துன்புறத்தியதாகவும், 1ம் வாதியை அடித்து காயப்படுத்தி அவர் மருத்துவமனையில் சேர்ந்து சிகிச்சை பெற்று வந்ததாகவும் கூறியுள்ளார்.

2) தாவா சொத்துக்கள் 1ம் பிரதிவாதியின் பூர்வீக சொத்துக்கள் என்றும், 25.06.2021ல் பிரதிவாதிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து நில புரோக்கர்கள் மூலமாக தாவா சொத்துக்களை வில்லங்கப்படுத்த முயற்சி செய்ததாகவும், மேலும் 1ம் பிரதிவாதியின் பாகத்தை விடுதலை செய்து கொடுக்க ஆவணம் ஏற்படுத்துவதாகவும், தாவா சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் என்பதால் தனிப்பட்ட முறையில் பிரதிவாதிகள்

வில்லங்கப்படுத்த அவர்களுக்கு உரிமை இல்லை என்றும் 2, 3 வாதிகளுக்கும் தாவா சொத்துக்களில் பாகம் உள்ளது. எனவே 2, 3 வாதிகளுக்குரிய பாகத்தை பிரித்துக் கொடுக்கும் வரை தாவா சொத்துக்களைப் பொறுத்து எவ்வித உரிமை மாற்றமும் செய்யாமல் இருக்க வேண்டுமென நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளனர்.

**<u>2ம் பிரதிவாதி தாக்கல் செய்து 1ம் பிரதிவாதி ஏற்றுக்கொண்ட பதிலுரையின் சுருக்கம்</u>**

3) வழக்குரை பத்தி 3ல் சொல்லியுள்ள சங்கதிகளில் 1ம் வாதிக்கும், 1ம் பிரதிவாதிக்கும் திருமணமாகி 2, 3 வாதிகள் வாரிசுகள் என்ற சங்கதிகளை தவிர மற்ற அனைத்து சங்கதிகளும் பொய்யானதாகும். திருமணத்திற்கு பின்னிட்டு 1ம் வாதியை கொடுமைப்படுத்தியதாக சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானதாகும். 1ம் பிரதிவாதி தனது கெட்ட பழக்கத்தினால் சேமிப்பு அனைத்தையும் கரைத்து விட்டதாகவும், பிரதிவாதிகள் அனைவரும் சேர்ந்து சொத்துக்களை வில்லங்கப்படுத்துவதாக சொல்வதும் பொய்யான சங்கதிகள் ஆகும்.

4) இவ்வழக்கின் வழக்கு மூலம் பொய்யானது. வாதிகள் கோரியுள்ள பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல. உண்மையில் 2ம் பிரதிவாதியின் அமைதியான சுவாதீனத்தில் 1ம் வாதியும், அவரது குடும்பத்தாரும் இடையூறு செய்து வருகின்றனர். 2ம் பிரதிவாதி தான் இவ்வழக்கை தாக்கல் செய்திருக்க வேண்டும். ஆனால் 1ம் வாதி பெண் என்பதால் எவ்வித வழக்கும் தாக்கல் செய்யாமல் பிரதிவாதிகள் அமைதியாக உள்ளனர். 1ம் வாதி பெண் என்பதை பயன்படுத்திக் கொண்டு பொய்யான சங்கதிகளை சொல்லி இவ்வழக்கையும், பல்வேறு குற்ற நடவடிக்கையும் பிரதிவாதிகளுக்கு எதிராக எடுத்து வருகிறார். எனவே இவ்வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டுமென பதிலுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>5ம் பிரதிவாதி தாக்கல் செய்து 3, 4 பிரதிவாதிகளால் ஏற்றுக்கொண்ட பதிலுரையின் சுருக்கம்</u>**

5) 1ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள பதிலுரையை ஒத்தே 3 முதல் 5 பிரதிவாதிகளும் தங்கள் பதிலுரையை தாக்கல் செய்துள்ளனர்.

**<u>6ம் பிரதிவாதி தாக்கல் செய்து 7, 8 பிரதிவாதிகளால் ஏற்றுக்கொண்ட பதிலுரையின் சுருக்கம்</u>**

6) வாதிகள் மற்றும் பிரதிவாதிகளுக்கு இடையே உள்ள உறவு முறை குறித்து வாதிகளே நிரூபிக்க வேண்டும். அதை போன்று வாதி, 1ம் பிரதிவாதிக்கு இடையே உள்ள குடும்ப பிரச்சனை குறித்தும் இப்பிரதிவாதிகளுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. 6 முதல் 8 பிரதிவாதிகளிடம் முறையாக ஆவணங்கள் வழங்கப்படும் நிலையில் அது குறித்து எவ்வித தடை உத்தரவும் இல்லாத போது அதை பதிவு செய்ய வேண்டியது இப்பிரதிவாதிகளின் கடமையாகும். வாதிகளுக்கு தாவா சொத்தில் பாகம் இருப்பின் அது குறித்து பாக வழக்கு மட்டுமே தாக்கல் செய்ய வேண்டும். அவ்வாறு இல்லாமல் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கதாகும்.

7) இருதரப்பிலும் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரை, எதிர்வழக்குரை மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் கீழ்க்கண்ட எழுவினாக்கள் வழக்கு விசாரணைக்காக வனையப்பட்டுள்ளன.

**<u>எழுவினாக்கள்</u>**

| | |
|---|---|
| 1. | Whether the plaintiffs are having right over the suit property? |
| 2. | Whether the Suit cause of auction is correct? |
| 3. | Whether the plaintiffs are entitled to the relief of permanent injunction? |
| 4. | To what other relief? |

8) வாதிகள் தரப்பில் 1ம் வாதி சண்முகசுந்தரி வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.11 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் ஆவண வாய்மொழி சாட்சியங்கள் இல்லை.

**<u>எழுவினா எண்.1ன் தீர்வு</u>**

**வாதிகளுக்கு தாவா சொத்தில் உரிமை உள்ளதா?**

9) இரு தரப்பு வாதமும் கேட்கப்பட்டது. வாதிகள் தரப்பில் தாவா சொத்துக்கள் வாதிகளுக்கும், 1, 2 பிரதிவாதிகளுக்கும் பாத்தியப்பட்ட பூர்வீக சொத்துக்கள் என்றும் அதில் 2, 3 பிரதிவாதிகளுக்கு உரிமை

உள்ளது என வாதிடப்பட்டது. இதனை நிரூபிக்க வா.சா.1 விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.11 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

10) வா.சா.ஆ.1–பிச்சைக்கார கவுண்டர் பெயரில் உள்ள பட்டா எண்.515. மேற்படி ஆவணத்தை பரிசீலனை செய்கையில், தாவா சொத்துக்களில் சில சொத்துக்கள் பிச்சைக்கார கவுண்டர் என்பவர் பெயரில் பட்டாவாக உள்ளது என்பதை அறிய முடிகிறது. இவ்வழக்கில் 2ம் பிரதிவாதி சுப்பா கவுண்டரின் தகப்பனார் பழனியப்ப கவுண்டர் என்றும், பழனியப்ப கவுண்டருக்கு 2,3 பிரதிவாதிகள் மகன்கள் என்றும் வாதிகள் தரப்பில் வாதிடப்பட்டது. எனவே வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள நிலங்களானது 2ம் பிரதிவாதியின் தகப்பனாரான பழனியப்ப கவுண்டரின் மற்றொரு மகனான பிச்சைக்கார கவுண்டர் பெயரில் உள்ளது என்றும் எனவே அச்சொத்து பூர்வீக சொத்து என்று வாதிகள் தரப்பில் வாதிடப்பட்டது.

11) பிரதிவாதிகள் தரப்பில் 1 முதல் 5 பிரதிவாதிகள் வழக்குரை தாக்கல் செய்த பின்னிட்டு வா.சா.1ஐ குறுக்கு விசாரணை செய்யும் சமயத்தில் வழக்கில் தோன்றாதரப்பினராக்கப்பட்டுள்ளனர். 6 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் பிச்சைக்கார கவுண்டருக்கு பழனியப்ப கவுண்டர் மட்டுமே வாரிசு என்பதை காட்ட வாதிகள் தரப்பில் எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றும், பழனியப்ப கவுண்டருக்கு மேலும் வாரிசுகள் இருக்காலம் என எதிர் வாதம் செய்யப்பட்டது.

12) வா.சா.ஆ.1 பிச்சைக்கார கவுண்டர் பெயரிலும், வா.சா.ஆ.2 பழனியப்ப கவுண்டர் மகன் சுப்ரமணியன் என்பவர் பெயரில் பட்டா எண்.368 தாவா சொத்துக்களில் 2 அயிட்ட சொத்துக்களுக்கு பட்டா ஏற்பட்டுள்ளது. அது பழனியப்ப கவுண்டர் மகன் சுப்ரமணியன் என்பவர் பெயரில் உள்ளது. சுப்ரமணியன் என்பவர் 2ம் பிரதிவாதியின் சகோதரர். மேற்படி நபர் இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கப்படவில்லை.

13) வா.சா.ஆ.3–பட்டா எண்.1396 பழனியப்ப கவுண்டர் மகன் பிச்சைக்கார கவுண்டர் மற்றும் சுப்பா கவுண்டர் ஆகியோர் பெயரில் உள்ள பட்டா. மேற்படி ஆவணத்தை பரிசீலனை செய்கையில், பழனியப்ப கவுண்டருக்கு 2ம் பிரதிவாதி சுப்பா கவுண்டர், பிச்சைக்கார கவுண்டர்

மற்றும் சுப்ரமணியன் ஆகியோர்கள் வாரிசுகளாக உள்ளனர் என்பதை அறிய முடிகிறது.

14) வா.சா.ஆ.4–பட்டா எண்.1458. பழனியப்ப கவுண்டர் மகன் பிச்சைக்கார கவுண்டர், சுப்ரமணியன் மற்றும் சில நபர்களின் பெயரில் உள்ள கூட்டுப்பட்டா. வா.சா.ஆ.5–பட்டா எண்.1420. பழனியப்ப கவுண்டரின் மகன் சுப்பா கவுண்டர், பிச்சைக்கார கவுண்டர் மற்றும் சிலர் பெயரில் உள்ள கூட்டுப்பட்டா. வா.சா.ஆ.6–பட்டா எண்.140. பழனியப்ப கவுண்டர் மகன் சுப்பா கவுண்டர் பெயரில் உள்ள பட்டா. மேற்படி ஆவணங்களை பரிசீலனை செய்கையில், தாவா சொத்துக்கள் அனைத்தும் 1, 2 பிரதிவாதிகளின் கூட்டுக் குடும்ப சொத்துக்கள் என்றும் அவை பூர்வீக சொத்துக்கள் என்பதால் 2, 3 வாதிகளுக்கு மேற்படி சொத்துக்களில் பாகம் உள்ளது என வாதிகள் தரப்பில் வாதிடப்பட்டது.

15) வாதிகள் தரப்பில் வா.சா.ஆ.11 ஆக குடும்ப வம்சாவழிப்பட்டியல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தில் பிச்சைக்கார கவுண்டருக்கு பழனியப்ப கவுண்டர் மகன் என்றும், மேற்படி பழனியப்ப கவுண்டருக்கு சுப்பா கவுண்டர் மட்டுமே வாரிசு என கண்டு மேற்படி வம்சாவழிப்பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது.

16) வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.7 வரையிலான ஆவணங்களை பரிசீலனை செய்கையில், பழனியப்ப கவுண்டருக்கு 2ம் பிரதிவாதியை தவிர பிச்சைக்கார கவுண்டர், சுப்பிரமணி என்ற இரண்டு மகன்கள் இருப்பதை அறிய முடிகிறது. மேற்படி நபர்கள் இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கப்படவில்லை. மேலும் தாவா சொத்துக்கள் அனைத்தும் 1 முதல் 7 ஆவணங்களில் கண்டுள்ள பட்டாக்களின் படி பழனியப்ப கவுண்டரின் வாரிசுகளுக்கு பாத்தியப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது.

17) இவ்வழக்கில் மேற்படி நபர்கள் தரப்பினர்களாக சேர்க்கப்படாமல் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வாதிகள் இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளது ஏற்கத்தக்கதாக இல்லை. மேலும் தங்கள் வழக்குரையில் 1ம் பிரதிவாதி 1ம் வாதியின் கணவர் என்றும், 2, 3 வாதிகளின் தகப்பனார் என்றும் கூறியுள்ளனர்.

18) தாவா சொத்துக்கள் 1, 2 பிரதிவாதிகளின் பூர்வீக சொத்துக்கள் என வாதிகள் தரப்பில் வாதிட்டுள்ள நிலையில் தாவா சொத்துக்கள் 1ம் பிரதிவாதி பெயரில் உள்ளது என்பதை காட்ட வாதிகள் தரப்பில் எந்த ஒரு ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை. 2ம் பிரதிவாதி உயிருடன் உள்ள நிலையில் தாவா சொத்துக்கள் குறித்து வாதிகள் உரிமை கொண்டாடுவது ஏற்கத்தக்கதாக இல்லை.

19) தாவா சொத்துக்கள் அனைத்தும் 2ம் பிரதிவாதி மற்றும் அவரது சகோதரர்களுக்கு தனித்தனியாக பட்டா ஏற்பட்டுள்ள நிலையில் அவை பூர்வீக சொத்துக்கள் என்பதற்கான எந்த ஒரு ஆவணத்தையும் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யவில்லை. எனவே வாதிகள் வாதிடுவது போல தாவா சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் என்றும் அதில் வாதிகளுக்கு உரிமை உள்ளது என்பதையும் நிரூபிக்க வாதிகள் தவறியுள்ளனர் என மேற்படி எழுவினாவிற்கு தீர்வு காண்கிறேன்.

**<u>எழுவினா எண்கள்.2 மற்றும் 3ன் தீர்வு</u>**

**வழக்கின் வழக்கு மூலம் சரியானதா?**

**வாதிகள் கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதா?**

20) 1, 2 பிரதிவாதிகள் வாதிகளை கொடுமை செய்து வீட்டை விட்டு துரத்தி விட்டதாகவும், இது குறித்து தோகைமலை காவல் நிலையத்தில் வாதிகள் புகார் செய்ததாகவும் மேலும் வாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்தினை 1 முதல் 5 பிரதிவாதிகள் வில்லங்கப்படுத்த முயற்சி செய்ததாகவும் வாதிகள் தரப்பில் இவ்வழக்கின் வழக்கு மூலமாக கூறப்பட்டுள்ளது.

21) வா.சா.ஆ.7 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், 1ம் வாதி 08.06.2021 அன்று தோகைமலை காவல் நிலையத்தில் 1, 2 பிரதிவாதிகள் மற்றும் சிலருக்கு எதிராக புகார் கொடுத்துள்ளார் என்பதை அறிய முடிகிறது. மேற்படி புகார் ஆனது குடும்ப சண்டை காரணமாக கொடுக்கப்பட்டுள்ளது என்பது தெரிகிறது. வா.சா.ஆ.8 முதல் வா.சா.ஆ.10– 1 முதல் 3 வாதிகளின் ஆதார் அட்டைகள். வா.சா.ஆ.7 ஆவணத்தை தவிர இவ்வழக்கின் வழக்கு மூலத்தை நிரூபிக்க வாதிகள் தரப்பில் வேறு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

22) வாதிகள் தரப்பில் தாவா சொத்துக்களை வில்லங்கப்படுத்த முயற்சி செய்ததாகவும் எனவே பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க வேண்டுமென வாதிட்டனர். ஆனால் அவ்வாறு வில்லங்கப்படுத்த முயற்சிப்பது குறித்து எந்த ஒரு ஆவணத்தையும் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யவில்லை. வா.சா.ஆ.7 ஆவணத்தின் அடிப்படையில் 1ம் வாதி மற்றும் 1ம் பிரதிவாதிக்கு இடையே குடும்ப பிரச்சனை ஏற்பட்டுள்ளது என்பதை மட்டுமே அறிய முடிகிறது. தாவா சொத்துக்கள் 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்பதை காட்ட இவ்வழக்கில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யாத நிலையில் தாவா சொத்துக்கள் 1, 2 பிரதிவாதிகள் வில்லங்கப்படுத்த முயற்சிப்பதாக கூறுவது ஏற்கத்தக்கதாக இல்லை.

23) உண்மையில் வாதிகள் தங்களுக்குரிய முறையான பரிகாரம் வேண்டுமெனில் தங்களது பாகத்தை பொறுத்து பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்திருக்க வேண்டும். அவ்வாறு இல்லாமல் 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும் கோரி இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளது பிரதிவாதிகளுக்கு வீண் தொல்லைகளை கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்திலேயே தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. வா.சா.1ஐ 6 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்த போது வாதிகள் தற்போது வரை பாகம் கோரி எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்பதை ஒப்புக்கொண்டுள்ளார். எனவே வாதிகள் இவ்வழக்கில் கோரியுள்ள வழக்கு மூலம் உண்மையானது என்பது குறித்து ஆவணங்களோ, 3ம் நபர் சாட்சிகளோ எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

24) மேலும் தாவா சொத்துக்களில் வாதிகள் சுவாதீனத்தில் இல்லை. வாதிகள் தங்களுக்குரிய பாகத்தை பெற வழக்கு தாக்கல் செய்யாமல் பிரதிவாதிகளுக்கு வீண் தொல்லைகள் கொடுக்க வேண்டியே பிரதிவாதிகள் தங்களது சொத்துக்களை வில்லங்கப்படுத்தக்கூடாது என வாதிகள் கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமானது சட்டப்படி ஏற்கத்தக்கதாக இல்லை. எனவே வாதிகளுக்கு இவ்வழக்கில் கோரியுள்ள பரிகாரம் எதுவும் கிடைக்கத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் முடிவு செய்து மேற்படி எழுவினாக்களுக்கு தீர்வு காண்கிறது.

**<u>எழுவினா எண்.4 –ன் தீர்வு</u>**

**வாதிகளுக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரம் என்ன?**

25) வாதிகள் இவ்வழக்கில் கோரியுள்ள பரிகாரங்கள் அவர்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என முடிவு செய்துள்ள நிலையில் வாதிகளுக்கு இவ்வழக்கில் கிடைக்கக்கூடிய வேறு பரிகாரங்கள் இல்லை என முடிவு செய்து மேற்படி எழுவினா எண்.4 ற்கு தீர்வு காண்கிறேன்.

**முடிவாக,**

இவ்வழக்கு தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இத்தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் குறிப்பெடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்து சரிபார்க்கப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 27 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

R TAMILARASI Digitally signed by R TAMILARASI Date: 2026.03.27 16:31:23 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**குளித்தலை.**

**<u>வாதிகள் தரப்பு சாட்சி</u>**

வா.சா.1 சண்முகசுந்தரி (1 ம் வாதி)

**<u>வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்</u>**

| வரிசை எண். | தேதி | ஆவணங்கள் விபரம் | குறிப்புகள் |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 16.06.2021 | பட்டா எண்.515 | கணினி நகல் |
| வா.சா.ஆ.2 | 16.06.2021 | பட்டா எண்.368 | கணினி நகல் |
| வா.சா.ஆ.3 | 11.03.2019 | பட்டா எண்.1396 | கணினி நகல் |
| வா.சா.ஆ.4 | 11.03.2019 | பட்டா எண்.1458 | கணினி நகல் |
| வா.சா.ஆ.5 | 10.12.2018 | பட்டா எண்.1420 | கணினி நகல் |
| வா.சா.ஆ.6 | 11.06.2021 | பட்டா எண்.140 | கணினி நகல் |
| வா.சா.ஆ.7 | 08.06.2021 | புகார் மனு ரசீது நகல் | கணினி நகல் |

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.8 | – | 1ம் வாதியின் ஆதார் அட்டை (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது) | நகல் |
| வா.சா.ஆ.9 | – | 2ம் வாதியின் ஆதார் அட்டை (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது) | நகல் |
| வா.சா.ஆ.10 | – | 1ம் பிரதிவாதியின் ஆதார் அட்டை (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது) | நகல் |
| வா.சா.ஆ.11 | – | வம்சாவழி பட்டியல் | அசல் |

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சி**

இல்லை

**பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்**

இல்ல

R TAMILARASI

Digitally signed by R TAMILARASI
Date: 2026.03.27 16:31:30 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**குளித்தலை.**

******************************
**PDM COURT, KULITHALAI**

**FAIR JUDGMENT**

**O.S.No.93/2021**

**D.D.27.03.2026**

**AFT**

***************************